# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# மூன்றாம் பத்து

## ஆறாம் திருவாய்மொழி - செய்யதாமரை
## கைங்கர்யம் செய்வதற்குப் பர வ்யூஹ விபவங்களைக் காட்டிலும் அர்ச்சாவதாரமே எளிதென்று அருளிச் செய்தல்

** செய்ய தாமரைக் கண்ணனாய் *
உலகேழும் உண்ட அவன் கண்டீர் *
வையம் வானம் மனிசர் தெய்வம் *
மற்றும் மற்றும் மற்றும் முற்றுமாய் **
செய்ய சூழ் சுடர் ஞானமாய் *
வெளிப்பட்டு இவை படைத்தான் * பின்னும்
மொய் கொள் சோதியோடு ஆயினான் * ஒரு
மூவர் ஆகிய மூர்த்தியே 1

மூவர் ஆகிய மூர்த்தியை * முதல்
மூவர்க்கு முதல்வன் தன்னை *
சாவம் உள்ளன நீக்குவானைத் *
தடங்கடல் கிடந்தான் தன்னை **
தேவ தேவனைத் தென்னிலங்கை *
எரி எழச் செற்ற வில்லியை *
பாவ நாசனைப் * பங்கயத் தடங்
கண்ணனைப் பரவுமினோ 2

பரவி வானவர் ஏத்த நின்ற *
பரமனைப் பரஞ்சோதியை *
குரவை கோத்த குழகனை *
மணி வண்ணனைக் குடக் கூத்தனை **
அரவம் ஏறி அலை கடல் அமரும் *
துயில் கொண்ட அண்ணலை *
இரவு நன்பகலும் விடாது * என்றும்
ஏத்துதல் மனம் வைம்மினோ 3

வைம்மின் நும் மனத்தென்று * யான்
உரைக்கின்ற மாயவன் சீர்மையை *
எம்மனோர்கள் உரைப்பதென்? * அது
நிற்க நாள்தொறும் ** வானவர்
தம்மை ஆளும் அவனும் * நான்முகனும்
சடைமுடி அண்ணலும் *
செம்மையால் அவன் பாத பங்கயம் *
சிந்தித்து ஏத்தித் திரிவரே 4

திரியும் காற்றோடு அகல் விசும்பு *
திணிந்த மண் கிடந்த கடல் *
எரியும் தீயோடு இரு சுடர் தெய்வம் *
மற்றும் மற்றும் முற்றுமாய் **
கரிய மேனியன் செய்ய தாமரைக்
கண்ணன் * கண்ணன் விண்ணோர் இறை *
சுரியும் பல் கருங்குஞ்சி * எங்கள்
சுடர் முடி அண்ணல் தோற்றமே 5

தோற்றக் கேடவை இல்லவன் உடையான் *
அவன் ஒரு மூர்த்தியாய் *
சீற்றத்தோடு அருள் பெற்றவன் அடிக்
கீழ்ப் * புக நின்ற செங்கண்மால் **
நாற்றத் தோற்றச் சுவை ஒலி *
உறல் ஆகி நின்ற * எம் வானவர்
ஏற்றையே அன்றி * மற்றொருவரை
யான் இலேன் எழுமைக்குமே 6

எழுமைக்கும் எனது ஆவிக்கு *
இன்னமுதத்தினை எனது ஆருயிர் *
கெழுமிய கதிர்ச் சோதியை * மணி
வண்ணனைக் குடக் கூத்தனை **
விழுமிய அமரர் முனிவர்
விழுங்கும் * கன்னல் கனியினை *
தொழுமின் தூய மனத்தராய் *
இறையும் நில்லா துயரங்களே 7

துயரமே தரு துன்ப இன்ப
வினைகளாய் * அவை அல்லனாய் *
உயர நின்றதோர் சோதியாய் *
உலகேழும் உண்டு உமிழ்ந்தான் தன்னை **
அயர வாங்கு நமன் தமர்க்கு *
அரு நஞ்சினை அச்சுதன் தன்னை *
தயரதற்கு மகன் தன்னை அன்றி *
மற்றிலேன் தஞ்சம் ஆகவே 8

தஞ்சம் ஆகிய தந்தை தாயொடு *
தானுமாய் அவை அல்லனாய் *
எஞ்சலில் அமரர் குல முதல் *
மூவர் தம் உள்ளும் ஆதியை **
அஞ்சி நீர் உலகத்து உள்ளீர்கள்! *
அவன் இவன் என்று கூழேன்மின் *
நெஞ்சினால் நினைப்பான் யவன் *
அவன் ஆகும் நீள் கடல் வண்ணனே 9

கடல் வண்ணன் கண்ணன் * விண்ணவர்
கரு மாணிக்கம் எனது ஆருயிர் *
பட அரவின் அணைக் கிடந்த *
பரஞ்சுடர் பண்டு நூற்றுவர் **
அட வரும் படை மங்க * ஐவர்கட்காகி
வெஞ்சமத்து * அன்று தேர்
கடவிய பெருமான் * கனை கழல்
காண்பது என்று கொல் கண்களே? 10

** கண்கள் காண்டற்கு அரியனாய்க் *
கருத்துக்கு நன்றும் எளியனாய் *
மண் கொள் ஞாலத்து உயிர்க்கெல்லாம் * அருள்
செய்யும் வானவர் ஈசனை **
பண் கொள் சோலை வழுதி நாடன் *
குருகைக் கோன் சடகோபன் சொல் *
பண் கொள் ஆயிரத்து இப்பத்தால் *
பத்தர் ஆகக் கூடும் பயிலுமினே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---